MCOP.No. 89/2022
Date : 03.09.2025.
Witness Name & Rank – தமிழரசன் - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. வழக்கில் புகார் காவல் நிலையத்தில் யார் கொடுத்தது என்றால் நான் மருத்துவமனையில் இருந்து கொடுத்தேன். நான் நல்ல மனநிலையில் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எங்களது கவனக்குறைவால் சாலையை கடந்த போது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். எத்தனை நாள் பொன்னி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றால் 3 நாட்கள் இருந்தேன். நான் இந்த வழக்கில் ரூ. 3 லட்சம் செலவானதாக சொல்லியுள்ள நிலையில் ரூ. 21 ஆயிரத்திற்கு மட்டும் பில் தாக்கல் செய்துள்ளதால் மருத்துவ செலவை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1 வது எதிர்மனுதாரருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை எனவே 3 வது எதிர்மனுதார் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.
2. எனது பணி சான்று அல்லது வருமான சான்று தாக்கல் செய்யவில்லை எனவே நான் கோரியுள்ள இழப்பீடு கிடைக்கத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் விபத்து நடந்துள்ளதால் இழப்பீடு மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1 வது எதிர்மனுதாரர் இளவராக இருந்து காப்பீடு விதிமுறைக்கு எதிராக வாகனத்தை ஓட்டியதால் 3 வது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---